நாட்டுக்கோழி வளர்ப்பில் மரபுசார் பராமரிப்பு மற்றும் நலம் பேணும் முறைகள்

செ. சதிஸ்குமார், ந. குமாரவேலு, க. பிரேமவல்லி மற்றும்
அ. சேர்ம சரவண பாண்டியன்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
சென்னை – 600 051

நமது வீட்டு முற்றங்களில் திரிந்து வளர்ந்த நாட்டுக்கோழிகள் நம் சமூக அமைப்பின் அடையாளமாகும். கோழி கூப்பிடுகிற பொழுது குடியானவனின் அன்றாடப் பணிகள் தொடங்குகிறது. ஆனால் சமூக – பொருளாதார மாற்றங்களினால் புறக்கடையில் வளர்ந்த நாட்டுக்கோழி வளர்ப்பு மெல்ல காணாமல் போய் கொண்டிருக்கிறது. நாட்டுக்கோழி இறைச்சிக்கும், நாட்டுக்கோழி முட்டைக்கும் மவுசு குறையவே இல்லை என்பதை நாம் அறிவோம். புறக்கடை நாட்டுக்கோழி வளர்ப்பு முறை தற்பொழுது தீவிர முறையில் தரையில் ஆழ்கூளமும், கூரையில் ஓலைக் கீற்றுகளையும் கொண்ட கொட்டகையில் வளர்க்கப்பட்டு வரும் நிலைக்கு மாறி வருகிறது. நாட்டுக்கோழிகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் உடல் நலத்தைப் பேணவும் சில மரபுசார் உத்திகள் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

1. இறைச்சியின் தரம் மேம்பட மற்றும் அடர் தீவனத்தைக் குறைக்க முயல் மசால் அல்லது குதிரை மசாலை ஒரு நாளைக்கு ஒரு முறை கொடுக்கலாம்.

2. தீனி உட்கொள்வதைத் தூண்ட புதினா சாறைத் தண்ணீரில் கலந்து கொடுக்கலாம்.

3. செரிமானம் ஆகாத நேரத்தில்

   அ) மணத் தக்காளிக்கீரை தழையுடன் 2 கரண்டி மஞ்சள் தூளைச் சேர்த்து வேக வைத்துக் கொடுக்கலாம்.

   ஆ) வினிகரை (250 மி.லி./ 1000 கோழிகளுக்கு) நீரில் கலந்து கொடுக்கலாம்.

4. உடல் எடையை அதிகரிக்க

   அ) வேர்க்கடலையை ஊற வைத்து (1½ கிலோ / 1000 கோழிகளுக்கு) காலையில் கொடுக்கலாம்.

   ஆ) பாசிப்பயிரை இரவில் ஊறவைத்து (2.4 கிலோ / 1000 கோழிகளுக்கு) காலையில் கொடுக்கலாம்.

   இ) கொட்டப்பாக்கை வேகவைத்து அல்லது ஊற வைத்து அதை அரைத்து (0.75 கிலோ / 1000 கோழிகளுக்கு வாய்வழியாகக் கொடுக்கலாம்.

5. சளியைப் போக்க

   அ) குப்பைமேனித் தழையுடன் மிளகு மற்றும் மஞ்சள் தூளைச் சேர்த்து அரைத்து அதனை வேகவைத்துக் கொடுக்கலாம்.

ஆ) ஆடா தொடா தழையை வேக வைத்துக் கொடுக்கவும்.

இ) பூண்டை வேக வைத்து அதனுடைய வடிநீரைக் கோழிகளின் மேல் தூவலாம்.

ஈ) மழைக்காலத்தில் தீவனத்துடன் மஞ்சளை (½ கிலோ / 1000 கோழி களுக்கு) சேர்த்துக் கொடுத்தால் சளியைக் கட்டுப்படுத்தலாம்.

உ) மயில் துத்தத்தை (ஒரு லிட்டர் தண்ணீரில் ½ கிராம் வீதம் (1000 கோழிகளுக்கு) நீரில் கலந்து கொடுக்கலாம்.

6.இரத்தக் கழிச்சலைக் கட்டுப்படுத்த

அ) 40–50 நாட்களில் கற்றாழையை நீர்த் தொட்டியில் ஊற வைத்து அந்நீரைக் கோழிகளுக்குக் கொடுக்கலாம்.

ஆ) பொன்னாங்கன்னிக் கீரைச் சாற்றைப் புளித்த மோருடன் சேர்த்துக் கொடுக்கலாம்.

இ) பனங்கருப்பட்டியை (650–800 கிராம் / 1000 கோழிகளுக்கு) தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். குறிப்பிட்டுள்ள அளவு பனங்கருப் பட்டியை நன்கு பொடி செய்து சுமார் 2 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து 10 லிட்டர் தண்ணீரில் கலந்து காலையில் கொடுக்கலாம்.

கோழிகளுக்கு ரேடியோ வசதி

தீவிர முறையில் பராமரிக்கப்படும் நாட்டுக்கோழிகளின் கொட்டகைகளில் ரேடியோ வசதியைப் பொருத்துவதால் கொட்டகையின் வெளியில் ஏற்படும் இடி, வாகனம் போன்றவைகளால் ஏற்படும் சத்தத்தைக் குறைக்கலாம். இது போன்ற இரைச்சல்களால் கோழிகள் உட்பட்டு அதனுடைய உற்பத்தித் திறன் பாதிக்கப்படலாம். ரேடியோ வசதியைப் பொருத்துவதால் 24 மணி நேரமும் சீரானசூழலை ஏற்படுத்துவதோடு உற்பத்தித் திறனும் அதிகரிப்பதாகப் பல பண்ணையாளர்கள் கூறுகின்றனர்.

இளங்குஞ்சுகளுக்கு நிலக்கரி அடுப்பின் மூலம் வெப்பம் தருதல்

நிலக்கரியை உபயோகிப்பதால், மின்சாரத்தை நம்பி இருக்கத் தேவையில்லை. இரண்டு பானைகளை எடுத்துக் கொண்டு ஒரு பானையைப் பல சிறு துளைகள் இட்டு அதில் நிலக்கரியை எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் மேல் ஒரு பானையை வைக்கவேண்டும். இந்த அமைப்பு 250–300 குஞ்சுகளுக்கு வெப்பம் கொடுக்கப் போதுமானது. மின்சார வெட்டினால் குஞ்சுகளுக்குப் பாதிப்பு ஏற்படாமல் இருக்க மாற்று ஏற்பாடாக நிலக்கரி வெப்ப முறையை நடைமுறைப் படுத்தலாம்.

